முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.197/2014**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 11.07.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 11.07.2025 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாணிக்கவாசகன் | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | இராமசந்திரன் | கிராமம்.. | பெரியநற்குணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

5. வா.சா.ஆ.9 குடும்ப அட்டை ஆவணத்தில் அசல் என்னிடம் இல்லை நகல் தான் உள்ளது. ராசாயாளின் குடும்ப அட்டை வா.சா.ஆ.9 சரியான ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தங்கவேலுக்கு எவ்வளவு நிலம் பாத்தியமாக இருந்தது என்றால் பத்திரத்தை தான் பார்க்கவேண்டும் தோராயமாக சுமார் 2 ஏக்கர் இருக்கும். தங்கவேல் இறந்தபிறகு அந்த நிலம் என்னவாயிற்று என்றால் 1 ஏக்கர் நிலம் உயிலின் மூலம் எனக்கு கொடுத்துவிட்டர். மற்றொரு ஏக்கர் நிலம் அவர் இறந்தபிறகு நான் விற்றுவிட்டேன். எனக்கு உயில் மூலம் கொடுக்கப்பட்ட 1 ஏக்கர் நிலத்தை சுமார் 10 வருடங்களுக்கு முன்பே விற்றுவிட்டேன். வா.சா.ஆ.10 ரசீது எந்த இடத்திற்கு என்றால் எனது தாத்தா தங்கவேலிடம் இருந்து எனக்கு வந்த நிலத்திற்கானதாகும். மேற்சொன்ன நிலம் நஞ்சை நிலமாகும். வா.சா.ஆ.10 வழக்கு சொத்திற்குரியது ஆகும். எவ்வளவு நிலம் தற்போது என்னிடம் உள்ளது என்றால் எனது தாத்தா ரத்தினசாமியின் நிலம் 11 செண்ட் என்னிடம் உள்ளது. 11 செண்ட் அல்லாமல் வழக்கு சொத்து 18 செண்ட் என்னிடம் உள்ளது.

6. வழக்கு சொத்து 18 செண்ட் எந்த வருடம் முதல் என்னிடம் உள்ளது என்றால் சுமார் 1998 முதல் என்னிடம் உள்ளது. என் தந்தை ராமசந்திரம் நாகராசுவிற்கு வாய்மொழி குத்தகையாக மேற்சொன்ன 18 செண்ட் இடத்தை கொடுத்திருந்தார். என் தந்தை இருந்தவரை நாகராசுவிடம் இருந்து குத்தகை பணம் வாங்கியிருந்தார். என் தகப்பனார் இறந்த பிறகு நாகராசு குத்தகை பணம் எனக்கு கொடுக்கவில்லை மாறாக நிலம் அவருடையது என்று கூறி பிரச்சனை செய்தார். என் தகப்பனார் 2002 இல் இறந்தார். 2002 ற்கு பிறகு குத்தகை பணம் கொடுக்காததற்கு நாகராசவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு

கொடுத்தேனா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தியை எனக்கு தெரியும். கிருஷ்ணமூர்த்தி கலியபெருமாளின் மகன் என்றால் சரிதான். கலியபெருமாள் ராசாயாள் அம்மாளின் சகோதரர் என்றால் சரிதான். ராசாயாள் 14.04.1991 தேதியில் உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7. பொன்னுசாமி மகன் நாராஜனை 1ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். சின்னப்பா மகன் தர்மலிங்கத்தை தெரியும். 1ம் பரதிவாதி, தர்மலிங்கத்திற்கும் எனக்கு விரோதம் எதுவும் இல்லை. மேற்சொன்ன நபர்கள் வீண் பிரச்சனை செய்பவர்கள் அல்ல என்று சொன்னால் அதை பற்றி எனக்குதெரியாது. வீரமுடையான்நத்தம் கிராமத்தை சேர்ந்த செந்தமிழ்செல்வனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பெரியநற்குணம் கிராமத்தில் கிருஷ்ணமூர்த்தி மகன் வீரபாண்டியனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வீரபாண்டியன் கையெழுத்து எனக்கு தெரியும். 25.06.1992 குத்தகை பத்திரத்தில் இருக்கும் கையெழுத்து வீரபாண்டியன் கையெழத்தா என்றால் எனக்கு சந்தேகமாக உள்ளது. எ னது தகப்பனார் 1ம் பிரதிவாதியிட் குத்தகை கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. 4ம் பிரதிவாதி தான் நாகராசுவிற்கு குத்தகை விட்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 பதிவு செய்யப்படாதது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.8 பதிவு செய்ப்படாதா ஆவணம் என்பதனால் எடுத்துகொள்ள முடியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாத்தியமானது அல்ல என்று சொன்னாலும் எனது அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல, பட்டா என் பெயரில் உள்ளது. பட்டா எந்த வருடம் என் பெயருக்கு மாறியது என்றால் 2013ம் ஆண்டு என் பெயருக்கு மாறியது. 2013 வரை பட்டா ராசாயாள் பெயரில் இருந்ததா என்றால் தங்கவேல் பெயரில் இருந்தது. என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய மனு கொடுத்தேனா என்றால் உயிலை காண்பித்து பட்டா பெற்றேன், மனு கொடுக்கவில்லை. வாட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடந்ததா என்றால் VAO விடம் உயிலை காண்பித்து வாரிசு என்ற முறையில் பட்டா மாற்றிக்கொண்டேன்.

9. நான் தான் தங்கவேலுவின் வாரிசு என்பதற்காக வாரிசு சான்றிதழ் பெற்றேனா என்றால் இல்லை. நான் வருவாய் துறையில் சரியாக விசாரணை நடத்தப்படாமல் செல்வாக்கை பயன் படுத்தி பட்டா மாற்றிக் கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயிலில் வழக்கு சொத்து பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு உரிமையோ, அனுபவமோ இல்லை என்றாலும் எதிர்வாதியை தொந்தரவு செய்யும் நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணையில்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Padmavathi,*
Principal District Munsif
Chidambaram.